**Copy of Deposition**

சார்பு நீதிமன்றம், கொடுமுடி, ஈரோடு மாவட்டம்.

அ.வ.எண். 64 /2024 நாள் :26.03.2026

வா.சா:–1 செந்தில்குமார் ஆஜர். சாட்சி சத்திய பிரமாணம் செய்யப்பட்டார்.

குறுக்கு விசாரணை தொடர்ச்சி(பிரதிவாதி தரப்பில்):–

தாவா சொத்து எனக்கு கிரைய வகையில் பாத்தியப்பட்டது இல்லை என்றால் சரிதான். பிதுராஜித வகையில் பாத்தியப்பட்டது. தாவா சொத்து எனக்கு பாத்தியப்பட்டது என்பதை காட்டுவதற்கு மூல ஆவணம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தின் முந்தைய பட்டா எண்.328ல் உள்ள வழக்கு சொத்தின் சர்வே எண்.417 தவிர மற்ற சர்வே எண்கள் 1 முதல் 4 பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். நானும், பிரதிவாதிகளும் உறவினர்கள் இல்லை என்றால் சரிதான். நானும், பிரதிவாதிகளும் வெவ்வேறு சமூகத்தை சார்ந்தவர்கள் என்றால் சரிதான். தாவா சொத்தின் முந்தைய பட்டா எண்.328 கூட்டு பட்டா இல்லை என்றால் சரிதான். மேற்படி பட்டா எண் ஒரு கருப்பண கவுண்டர் மகன் பழனியப்ப கவுண்டர் பெயரில்தான் இருந்தது என்றால் சரிதான். கருப்பண கவுண்டர் மகன் பழனியப்ப கவுண்டர் என்பவர் 2ம் பிரதிவாதி பழனியப்பகவுண்டரை குறிக்கிறது என்றால் சரியல்ல. அவர் எனது அப்பாவின் அப்பா. கருப்பண கவுண்டர் மகன் பழனியப்ப கவுண்டர் என்பவர் எனது மூதாதையர் என்றால் பட்டா எண்.328ல் உள்ள தாவா சர்வே எண் தவிர மற்ற சொத்துக்களின் சர்வே எண்கள் இந்த பட்டாவில் இடம் பெற்றிருக்க முடியாது என்றால் சரியல்ல. வருவாய்துறையினரால் ஏற்படுத்தப்பட்ட தவறு. நானும், எனது தகப்பனாரும் செய்து கொண்ட பாகபிரிவினை பத்திரமே 1 முதல் 4 பிரதிவாதிகளுக்கு சொந்தமான வழக்கு சொத்தை அவர்களுடைய பட்டாவில் இருந்து எடுத்து என் பெயரில் உரிமை ஆவணம் ஏற்படுத்திக்கொள்ள செய்யப்பட்டது என்றால் சரியல்ல. காலம் காலமாக எங்கள் அனுபவத்தில்தான் உள்ளது. தாவா சொத்தின் பழைய சர்வே எண்195/C,196/1 எங்கள் குடும்பத்திற்கு பாத்தியப்பட்டது என்பதை காட்ட ஆவணம் தாக்கல் செய்யப்பட்டதா

என்றால் இல்லை. அசல் வழக்கு எண்.64/2024 இந்த அசல் வழக்கில் பிரதிவாதிகள் என்ன எதிர் உரை தாக்கல் செய்துள்ளார்கள் என்றும், அந்த எதிர் உரையுடன் என்ன ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளார்கள் என்றும் தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். எதிர் உரையுடன் 417க்கு பசலி எண்.1393 வருடத்தில் இருந்து 1409 வருடம் வரை அடங்கல் 1 முதல் 4 பிரதிவாதிகள் பெயரில் உள்ளது என்றும் அதனை அவர்கள் தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் அது சரியான ஆவணம் அல்ல. மேற்படி தாவா சொத்திற்கு 1972ல் இருந்து 2015ம் வருடம் வரை கிஸ்து தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல. அவர்கள் கிஸ்து செலுத்தியுள்ள சொத்து அமைந்துள்ள கிராமம் கொளத்துப்பாளையம் A கிராமம் சம்பந்தப்பட்டது. தாவா சொத்து அமைந்துள்ளது கொளத்துப்பாளையம் B கிராமம். 2ம் பிரதிவாதி பெயரில் தாவா சொத்திற்கு 2015ம் வருடம் வரை பட்டா தாக்கல் செய்யப்பட்டது என்றால் அது சரியான பட்டா இல்லை. மேற்படி சொத்திற்கு பாகபிரிவினை வழக்கு அசல் வழக்கு எண்.208/2014 1ம் பிரதிவாதி அவர்கள் குடும்பத்தினர் மீது தாக்கல் செய்து சமரச தீர்ப்பாணை பெற்றுள்ளார்கள் என்றால் அது மோசடியாக பெறப்பட்டது. மேற்படி தீர்ப்பாணையின் படி 22.01.2015ம் தேதி அன்று 5ம் பிரதிவாதிக்கு 4ம் பிரதிவாதி விற்பனை செய்துள்ளார் என்றால் மோசடியான விற்பனை. 2015ம் வருடத்திற்கு முன்பு வரை 1 முதல் 4 பிரதிவாதிகள் தாவா சொத்தில் சுவாதீனத்தில் இருந்தார்கள் என்றும் பின்னிட்டு 5ம் பிரதிவாதி கிரைய தேதியில் இருந்து இன்று வரை சுவாதீனத்தில் இருந்து வருகிறார் என்றால் சரியல்ல. வா.த.சா.ஆ.1 பட்டா நான் பொய்யான பாகபிரிவினை பத்திரம் தயாரித்து வருவாய் துறை துணையுடன் பழைய பட்டா எண்.328ல் இருந்து தாவா சர்வே எண்ணை பிரித்து எனக்கு தனிப்பட்ட முறையில் பாத்தியப்பட்ட பட்டா எண்.1218ல் சேர்த்து கொண்டேன் என்றால் சரியல்ல. மேற்படி பட்டா எண்ணை எந்த தேதியில் செய்தேன் என்றால் ஞாபகம் இல்லை. வா.த.சா.ஆ.3 கிராம நிர்வாக அலுவலர் சான்று சம்பந்தப்பட்ட கிராம நிர்வாக அலுவலர் மூலம் குறியீடு செய்யப்படாததால் மேற்படி ஆவணம் அனுமதிக்கத்தக்க ஆவணம் அல்ல என்றால் சரியல்ல. நான் வருவாய்துறை அதிகாரிகளிடமிருந்து பெற்ற ஆவணங்கள் என் பெயருக்கோ எனது குடும்ப நபர்களுக்கோ சம்பந்தப்பட்ட ஆவணம்

## Copy of Deposition

அல்ல என்றால் சரியல்ல. நான் தாவா சொத்தின் உரிமையாளர் அல்ல என்றாலும், நான் எந்த காலத்திலும் தாவா சொத்தின் சுவாதீனத்தில் இல்லை என்றால் சரியல்ல. நான் வருவாய் துறை அதிகாரிகளின் உதவியுடன் வருவாய் ஆவணங்களை தயார் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் ஈரோடு முதன்மை சார்பு நீதிமன்றத்தில் அசல் வழக்குஎண்.348/2024 வழக்கில் என்ன பரிகாரம் கோரியுள்ளேன் என்றால் தாவா சொத்து எனக்கு மட்டுமே பாத்தியப்பட்டது என்று பரிகாரம் கோரியுள்ளேன். மேற்படி வழக்கில் இந்த வழக்கு சொத்தை கிரையம் பெற்ற நந்த குமாரை தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் எனது குடும்பத்திற்கும் அவருக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்பதால் சேர்க்கவில்லை. 25.09.2014ம் தேதி அன்று நானும், எனது தந்தை, எனது அத்தை மற்றும், சகோதரிகள் ஆகியோர்கள் பதிவு செய்யப்பட்ட விடுதலை பத்திரம் ஏற்படுத்திக்கொண்டோம் என்றால் ஆமாம். அதன் பின்னிட்டு நான் மேற்படி தாவாவை தாக்கல் செய்யவேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல. பழைய சர்வே எண் பொறுத்து திருத்தம் இருந்தது என்பதால் வழக்கு தாக்கல்செய்தேன். மேற்படி வழக்கில் எந்த சொத்திற்கு சர்வே எண் திருத்தம் செய்ய வேண்டும் என்று கோரியிருந்தேன் என்றால் சர்வே எண்.417க்கு மட்டும். மற்றொரு சர்வே எண்ணிற்கு விஸ்தீரணம் மாறுபட்டிருந்தது அதை பொறுத்தும் கோரியிருந்தேன். நான் சொல்வது சரியல்ல என்றாலும், நான் மேற்படி தாவாவில் கோரியுள்ள பரிகாரத்தில் தவறான சர்வே எண் இது என்றும், அதற்கு சரியான சர்வே எண் குறிப்பிட்டு குறிப்பாக விளம்புகை பரிகாரம் கோரவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தை வேண்டும் என்றே எனது பெயரில் உரிமை ஏற்படுத்திக்கொள்ள மேற்படி வழக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல. மேற்படி சர்வே எண்ணை பொறுத்து அ.வ.எண்.64/2024 நிலுவையில் இருக்கும்போது இந்த வழக்கை தாக்கல் செய்யவேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல.

## Copy of Deposition

**பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.**

| Taken down by me in Open Court read over to the witness and acknowledge by |
|---|
| Interpreted<br>Him / Her To Be Correct<br>P SRIDEVI Digitally signed by P SRIDEVI Date: 2026.03.26 10:31:36 +0200<br>Subordinate Judge,<br>Kodumudi |